பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

18 07 2026 6 45

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. முன்மாதிரி கிராமத் திட்டத்தின் கீழ் பட்டியலின மக்கள் அதிகமாக வசிக்கும் கிராமங்கள் பெரிதும் பயனடையும் என்று மத்திய சமூகநீதித்துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் காலியாக உள்ள அம்பாசமுத்திரம், மதுராந்தகம், விராலிமலை உள்ளிட்ட 7 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த கால அவகாசம் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

3. மேகதாதுவில் அணை கட்ட ஒருபோதும் தமிழக அரசு அனுமதிக்காது என்று மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. வினோத் கூறியுள்ளார்.

4. தமிழக முதலமைச்சர் திரு. விஜய், அண்டை மாநில அரசுகளுடன் பேசி, தமிழகத்தின் உரிமைகளை பெற வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் பி.வி. சிந்து இன்று சீனாவின் Chen Yufei-ஐ எதிர்கொள்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

முன்மாதிரி கிராமத் திட்டத்தின் கீழ் பட்டியலின மக்கள் அதிகமாக வசிக்கும் கிராமங்கள் பெரிதும் பயனடையும் என்று மத்திய சமூகநீதித்துறை அமைச்சர் திரு. வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

இந்த திட்டத்தின் மூலம் சுமார் 48 லட்சம் கிராம மக்கள் பயனடைந்துள்ளதாகவும், இதுவரை இந்த கிராமங்களில் 46 ஆயிரத்து 782 வளர்ச்சித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

24 ஆயிரத்து 133 கிராமங்களுக்கு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், கிராமங்களின் அடிப்படைக் கட்டமைப்பையும் மேம்படுத்தியதன் அடிப்படையில் 16 ஆயிரத்து 759 கிராமங்கள் முன்மாதிரி கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய இணையதளம் மற்றும் செயலி வாயிலாக பணிகள் அனைத்தும் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் திரு. வீரேந்திர குமார் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் காலியாக அம்பாசமுத்திரம், மதுராந்தகம், விராலிமலை உள்ளிட்ட 7 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த 6 மாத கால அவகாசம் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி முகாமின்போது செய்தியாளர்களிடம் பேசிய தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமார், இந்த தொகுதிகள் தொடர்பான தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதை ஆணையம் கருத்தில் கொண்டுள்ளதாக கூறினார்.

தேர்தல் வழக்குகள் முடிந்த பின்னர் இடைத்தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

காவிரி நதிநீரில் தமிழகத்திற்கு உரிமை உள்ளது என்றும், மேகதாதுவில் அணை கட்ட ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. வினோத் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் நேற்று கூடுதலாக மகளிர் பேருந்து சேவையை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரி நீரில் உள்ள உரிமையைப்

பாதுகாக்க தேவையான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் தவெக அரசு மேற்கொள்ளும் என்று கூறினார்.

<<<<>>>>

தமிழக முதலமைச்சர் திரு. விஜய், அண்டை மாநில அரசுகளுடன் பேசி, தமிழகத்தின் உரிமைகளை பெற வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில், காவிரி, மேகதாது, முல்லைப் பெரியாறு உள்ளிட்ட தண்ணீர் பிரச்சினைகளுக்கு முந்தைய அரசு தீர்வு காணவில்லை என்று கூறினார்.

பல ஆண்டுகளாக நீடிக்கும் இப்பிரச்சினைகளுக்கு கர்நாடகா, கேரள மாநில அரசுகளுடன் பலமுறை பேச்சுகள் நடத்தப்பட்டும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது கேரளாவிலும், கர்நாடகாவிலும் தவெக-வின் தோழமைக் கட்சியான காங்கிரஸ் அரசு இருப்பதால் அம்மாநில முதல்வர்களின் ஒத்துழைப்போடு காவிரி மற்றும் முல்லைப்பெரியாறு பிரச்சினைகளுக்கு தமிழக அரசு நிரந்தரமான தீர்வைக் காண வேண்டும் என்று திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி கோயிலுக்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் போலி ஆவணங்கள் மூலம் முறைகேடாக பதிவு செய்யப்பட்ட விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

பழனியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. கே. பாலகிருஷ்ணன், வழக்கமான சார்பதிவாளர் விடுப்பில் சென்றதும், கொடைக்கானலில் இருந்து மற்றொரு சார்பதிவாளர் ஒரேநாளில் பத்திரப்பதிவு செய்து கொடுத்ததும் எப்படி நடந்தது என்று கேள்வி எழுப்பினார்.

இந்த விவகாரம் தொடர்பாக சிபிசிஐடி விசாரணைக்கு மாநில அரசு உத்தரவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆவடியில் புதிய குடும்ப அட்டைகளை நேற்று வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்கள் தங்களின் பெயர், முகவரி போன்ற

விவரங்களை இணையதளம் வாயிலாக வரும் 31ஆம் தேதி வரை சுயமாக பதிவு செய்துகொள்ளலாம் என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து அடுத்த மாதம் ஒன்றாம் தேதி முதல் 30ஆம் தேதி வரை களப் பணியாளர்கள் வீடுகளுக்கு நேரடியாக வந்து அந்த விவரங்களை சரிபார்ப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் முறையாக கொண்டு சேர்க்க மக்கள் தொகை கணக்கெடுப்பு உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

சரியான தகவல்கள் அரசுக்கு பல்வேறு வகைகளில் பயனுள்ளதாக இருக்கும் என்றும், எனவே பொதுமக்கள் அனைவரும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஆவர்த்துடன் பங்கேற்று பணியாளர்களுக்கு ஒத்துழைக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தவெக எம்.எல்.ஏ. ஒருவரிடம் ஆட்சியைக் கவிழ்க்க பேரம் பேசியதாக கைது செய்யப்பட்ட 3 பேரின் ஜாமீன் மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

நேற்று இவர்கள் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், விசாரணை ஆரம்பகட்டத்தில் உள்ளதாகவும், தற்போது ஜாமீன் வழங்கினால் விசாரணை பாதிக்கப்படும் என்றும் வாதிட்டார்.

அரசியல் காரணங்களுக்காக தங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக எதிர்த் தரப்பினர் தெரிவித்தனர்.

காவல்துறை வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி, கைது செய்யப்பட்டுள்ள 3 பேரின் ஜாமீன் மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

**<<<<>>>>**

தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் ஏனைய பகுதிகள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதியில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி

மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் நாகை மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களாக கடுமையான வெயில் மக்களை வாட்டி வதைத்து வந்த நிலையில், நேற்று மாலை திடீரென பலத்த மழை பெய்தது.

இதன் காரணமாக வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் காணப்பட்டதால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்க விமானப்படை தொடர்ந்து 7வது நாளாக நேற்றும் ஈரான் மீது கடும் தாக்குதலை நடத்தியது.

------------

மெக்சிகோவில் நேற்றிரவு கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவில் 7 புள்ளி 4ஆக பதிவாகியுள்ளது.

------------

மேற்குவங்க மாநிலம் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் நேற்று வேன் மீது ரயில் மோதியதில் உயிரிழந்த 5 குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.

------------

சிங்கப் பெண் அதிரடிப்படை சார்பில் திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் மாணவ-மாணவிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

------------

உதகமண்டலம் அருகே கப்பச்சி கிராமத்தில் நேற்று காட்டெருமை தாக்கியதில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார்.

------------

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி அருகே அமைந்துள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த சுகரீஸ்வரர் திருக்கோயிலில் ஆடி மாத முதல் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு நேற்று திருவிளக்கு பூஜை நடைபெற்றது.

------------

விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியை மாவட்ட ஆட்சியர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் தொடங்கி வைத்தார்.

------------

திருச்சி கிழக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் நேற்று திடீர் சோதனை நடத்தி G-Pay மூலம் பரிமாறப்பட்ட சுமார் 12 லட்சம் ரூபாய் குறித்து விசாரணை நடத்தினர்.

------------

கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்று லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் நடத்திய திடீர் சோதனையில் கணக்கில் வராத 2 லட்சத்து 22 ஆயிரத்து 200 ரூபாயை பறிமுதல் செய்தனர்.

------------

ஆடி வெள்ளியை முன்னிட்டு நாகை ஸ்ரீ சொர்ணகாளியம்மன் ஆலயத்தில் முக்கிய நிகழ்வான பூச்சொரிதல் உற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

------------

சென்னையில் அம்மா உணவகங்களை நாள்தோறும் பயன்படுத்வோர் எண்ணிக்கை ஒரு லட்சமாக அதிகரித்துள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் பி.வி. சிந்து சீனாவின் Chen Yufei-ஐ எதிர்கொள்கிறார்.

டோக்கியோவில் இன்று காலை 7 மணிக்கு இந்தப் போட்டி தொடங்குகிறது.

ஜப்பான் வீராங்கனை Nozomi Okuhara காலிறுதிப் போட்டியில் இருந்து விலகியதால் நேடியாக அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

------------

உலகக் கோப்பை கால்பந்து 3ஆம் இடத்திற்கான போட்டியில் ஃபிரான்ஸ் - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இந்திய நேரப்படி நாளை அதிகாலை மணி 2.30க்கு நடைபெற உள்ளது.

<<<<The End>>>>